# MARUDHAR KESARI JAIN COLLEGE FOR WOMEN (AUTONOMOUS), VANIYAMBADI

## PG AND RESEARCH DEPARTMENT OF TAMIL

## II M.A., TAMIL – SEMESTER - IV

| |
|---|
| **Core Course -1:** பெண் படைப்பாளர்களின் இலக்கியம்<br><br>Code: 23PETA43 |
| Unit: 2- பெண்பாற் புலவர்கள் 1. ஔவையார் 2. வெள்ளிவீதியார்<br><br>3. பொன்முடியார் 4. காரைக்கால் அம்மையார். |
| **Learning Objectives:** தமிழ் இலக்கிய பரப்பில் பெண் படைப்பாளர்களை அறிந்து கொள்ளுதல்.பெண்ணிலக்கிய கொள்கைகளை விளங்கிக் கொள்தல் பெண் படைப்பாளர்களின் இலக்கியங்கள் வழி வாழ்வியலை உணர்தல்.காலந்தோறும் பெண் மொழியின் உளவியலை உணர்ந்து கொள்ளுதல்.பெண் படைப்பாளர்களின் நெறிகளைவிளங்கிக்கொள்ளுதல்: |
| **Course Outcome:**<br><br>1.தமிழ் இலக்கிய பரப்பில் பெண் படைப்பாளர்களை அறிவர்.<br>2.பெண் இலக்கிய கொள்கைகளை விளங்கிக் கொள்வர்.<br>3.பெண் படைப்பாளர்களின் இலக்கியங்கள் வழி வாழ்வியலை அறிவர்.<br>4.காலம் தோறும் பெண் மொழியின் உளவியலை உணர்ந்து கொள்வர்.<br>5.பெண் படைப்பாளர்களின் சொல் நெறிகளை விளங்கிக் கொள்வர் |

**அலகு** -2

ஔவையார் பெண்ணிய பார்வை.. பெண்மை பற்றிய கருத்துக்களை இரண்டாகப் பிரிக்கலாம் ஒன்று மரபுநெறி மற்றொன்று மறுமலர்ச்சி நெறி வரலாற்று நோக்கி கண்டால் பெண் அடிமை என்பது இடைக்காலத்தில் ஏற்பட்ட நிலையே ஆகும் பெண்மை என்பது மானுடத்தின் ஒரு கூறு பெண் தன்மை மாட்சிமை என சதுரகராது குறிப்பிடுகிறது பெண்மையெல்லாம் தாய்மை தான் என்று திருவிக அவர்கள் குறிப்பிடுகிறார் பெண்ணியலாளர்கள் எடுத்துரைக்கின்ற பெண் உரிமைகள் அனைத்தும் சங்க காலத்தில் வாழ்ந்த ஔவையாருக்கும் அவர் காலத்தில் வாழ்ந்த ஓடத்தாம கண்டியார் வெள்ளிவீதியார் காக்கை பாடினியார் போன்றிருக்கும் முழுமையாகஇருந்துள்ளது

**ஔவையாரும்பெண்உரிமையும்**..

தமிழ் பெண்ணுலகில் தலைமை ஓங்கி நிற்கும் பெண்மணியாக ஔவை திகழ்ந்தார்.. ஔவையார் திருமணம் செய்து கொண்டு வாழ்ந்ததாக பாடல்களில் ஒரு குறிப்பு காணப்படவில்லை.. சங்கத் தொகையின் நூல்களில் அவ்வையார் பாடிய பாடல்களில் எண்ணிக்கை 69 அவற்றுள் 33 பாடல்கள் குடும்ப வாழ்க்கையையும் எடுத்துரைக்கின்றன.. பிரிவு பற்றிய பாடல்கள் யாவும் ஆங்காங்கே அவ்வையார் சந்தித்த பெண்களுக்கு ஆறுதலாக அவர் பாடிய பாடலாக இருக்கலாம் என்று எண்ணத் தோன்றுகிறது பெண்ணாகிய அவ்வையார் பெண்களின் மனதில் உணர்ந்து பாடுவதற்கும் பிற புலவர்கள் பாடுவதற்கும் வேறுபாடு இருக்கிறது இதை அவ்வையாரே தன் பாடல் ஒன்றில் சுட்டிக்காட்டி உள்ளார் தலைவருக்கு என் நிலை தெரியாது அவரை நீண்ட நாள் பிரிந்து இருந்தால் நான் வாடி போவேன். என்பது அவருக்கு தெரியாதா அதெல்லாம் தெரிந்திருக்கும் என்று”**நம் மனத்து அன்ன மென்மையின்மையின் நம் முடைய உலகம் உள்ளார்**

**கொல்லோ**"என்று ஒரு தலைவி ஆண் மனத்தையும் பெண் மனத்தையும் வேறுபடுத்திக் கூறுகிறார் இது பெண் உணர்ச்சிகளை கற்பனை செய்து பாடும் ஆடவர் பாடல் பற்றிய ஔவையாரின் கருத்தாகும்..

"**முட்டுவேன் கொல் தாக்குவேன் கொல்**
**ஓர் ஏன் யானும் ஓர் பெற்றி மேலிட்டு**
**அ ஆ ஒல் என கூவேன் கொல்**
**ஆலமரல் அசைவளி அழலைப்ப**
**என் உயவு நோய் அறியாது துஞ்சும் என் ஊர்க்கே**"

என்ற அவ்வையின் குறுந்தொகை பாடல் காதலித்த தலைவன் காதலியின் அருகில் இல்லை இரவு காலத்தில் இனிய தென்றல் வீசுகிறது ஒரே முழுமையான அமைதியில் உறங்கிக் கொண்டு கிடைக்கிறது இந்நிலையில் தன்னந்தனியாக உறக்கம் வராமல் விழித்துக் கொண்டிருக்கும் காதல் வயப்பட்ட ஒரு பெண்ணின் வேதனையை இப்பாட்டு எடுத்துரைக்கிறது அவளை யாரும் அடிக்கவோ திட்டவோ இல்லை ஆனால் தனிமையில் விட்டு விட்டதே என் நிலைமை அவளுக்கு தாங்க முடியாத தண்டனையாக இது கருதுகிறது இத்தகைய தனிமை தவிப்பை ஒரு பெண்ணால் மட்டும் தான் உணர முடியும் காதலனை அல்லது கணவனைப் பிரிந்து வாடிய மகளிர்க்கு மேலே குறித்தது போன்ற பிரிவு துன்பத்தை வேதனையை ஆங்காங்கே அவ்வையார் சுட்டிக்காட்டுகின்றார்.. அவ்வையார் காலத்தில் பிரிந்து வாழ்ந்த கணவன்மாரை தேடிக்கொண்டு புறப்பட்டுவிட்ட ஆதிமந்தி வெள்ளிவீதியார் என்ற இரண்டு பெண்களைப் பற்றியும் பரவலாக பேசப்பட்டது.

"**நெறி படு கவலை நிரம்பா நீள் இடை வெள்ளிவீதியைப் போன்ற நன்றும் செலவு அயர்ந்தி சினால் யானே**"

என்று பெண்ணின் மனநிலையை அறிந்து சொல்லிய வேறு இரண்டு பாடல்களையும் அவ்வையார் பாடியுள்ளார் கணவன் தன்னைப்

பிரிந்து செல்ல மாட்டான் என்று எண்ணிய மனைவி வருந்தும்படி எதிர்பாராமல் பொருள் ஈட்ட புறப்பட்டு விட்டான் அதை அறிந்த மனைவி எதிர்பாராததால் தான் மட்டும் இவ்வளவு துன்பமாக இருக்கிறேன் ஆனால் என்ன செய்வது நம் உள்ளம் இத்தகைய செயலை எதிர்பார்க்கவில்லை என்று எண்ணி பெருமூச்சு விடுகிறாள் இதனை

**"செல்லார் அல்ல என்று யான் இகழ்ந்தனனே**
**ஒள்வார் அல்லல் என்று அவர் இகழ்ந்தனரே"**

மற்றொரு பெண்ணுக்கு இதே நிலையில் ஏற்படும் துன்ப அனுபவத்தை வேறொரு பாடல்களில் கூறுகிறார் காதலின் பிரிவு துயரத்தை தாங்கிக்கொள்ள இவளால் முடியவில்லை. அதனால் "உள்ளின் உள்ளம் வேமே உள் ளாது இருப்பின் எம் அள வைத்து அன்றே"என்று பெண் உள்ளங்களை தெளிவான படப்பிடிப்புகளாக காட்டுகிறார் இவை எப்போது படைக்கப்பட்ட பாடல் ஆக இருப்பினும் பிரிவால் வருந்த பெண்களுக்கு எக்காலத்தும் சிறந்த ஆறுதல் துணையாக விளங்கும் என்பதில் ஐயமில்லை. தலைவன் பிரிவினால் தலைவி வருந்தி இருக்கிறாள் உடல் மெலிகிறாள் அதை கண்ட அவளது தாய் காரணம் அறியது புறம் மகளை அழைத்து உணவினால் அவள் ஒவ்வொரு தெய்வமாக கூப்பிட்டு தனக்கு உண்மையைச் சொல்ல வேண்டும் என்று கேட்கிறாள் அவள் பாடிய பாடலில் தோழிக்கு ஒரு வழி கிடைத்து விடுகிறது

**"அகவன் மகளே அகவன் மகளே இன்னும்**
**பாடுக பாட்டே அவர் நன்னெடும் குன்றம்**
**பாடிய பாட்டே அகவன் மகளே இன்னும்**
**பாடுக பாட்டே""**

என்று தோழி கட்டுவிச்சி இடம் தலைவன் மலையை இன்னொரு முறை பாடுக என்கிறாள் இப்பாடலில் மகளிரின் மனத்தை உளவியல் பாங்கோடு விளக்குகிறார் ஔவையார்.

அவ்வை ஒரு பெண் என்பதால் அவரின் அறிவு நல் மேம்பாடு குறைத்து மதிப்பிட பெறவில்லை. புறநானூற்று பாடலில் அதியமான் தன் சார்பில் தூது செல்ல ஒளவையாரை தேர்ந்தெடுத்தது ஒன்றே அவனது உயர் மதிப்புக்கும் தன்னம்பிக்கைக்கும் உரியவராக ஒளவையார் விளங்கியுள்ளார் என்பது தெரிகிறது இது சங்க காலத்தில் பெண்களுக்கு இருந்த மதிப்பையும் உரிமையையும் காட்டுகிறது..

**மரபுநெறியும்மறுமலர்ச்சிநெறியும்**

தொண்டைமானும் அவ்வையை அரசியல் தூதுவராக ஏற்றுள்ளார் என்பது நினைக்கத் தக்கது அரசியல் விவாதிக்கப்படுகின்ற இடத்தில் பெண்களை சேர்க்கக்கூடாது என்று பாரதத்தில் கூறப்பட்ட பெண் ஒதுக்கல் பெண் தாழ்த்தல் கொள்கைக்கும் பழந்தமிழ் போக்கும் உள்ள பெரிய வேற்றுமை எண்ணி உணரவும் நினைந்து மகிழவும் தக்கதே.இரண்டு அரசர்களும் அவர்கள் மூலம் தமிழ் சமுதாயமும் பெண்மைக்குத் தந்த ஊர் சம உரிமையை அவ்வையார் ஏற்று காப்பாற்றி மேம்படுத்தியது இக்கால பெண்களும் எண்ணி பெருமைப்படத்தக்கது.

**அவ்வையும் நெல்லிக்கனியும்**

அரிதாக கிடைத்த நெல்லிக்கனியை தான் உண்டு வாழ்வதை விட அவ்வையாரை போன்ற தமிழ் புலவர்கள் நீண்ட நாள் வாழ்வதே நல்லது என நினைத்து ஒளவைக்கு வழங்கினான் அதியமான்

**“நீல மணிமிடற்று ஒருவன் போல்**
**மன்னுகபெருமநீயே.....**
**சிறி இலை நெல்லித்தீங்கனி குறியாது**

**சாதல் நீங்க எமக்கு ஈந்தனையே””**

என்று போற்றினார் ஆராய்ந்து சொல்வன்மை நான் நலம் அவ்வையை மிகுந்து போற்றுகிறது தமிழ் பெண் குலம் நேற்றுக்கும் இன்றைக்கும் இடையே ஒரு நெருங்கிய உறவை காப்பாற்றிக் கொண்டு வந்திருக்கின்றது பல துறைகளிலும் போதிய உரிமைகளும் கல்வியும் உடையவர்களாக பெண்களை தமிழ் சமுதாயம் வளைத்துள்ளது அதேபோல் தமிழ் சமுதாயம் வளர்ந்து வந்திருந்தால் அக்காலத்தில் பெருந்துறையாகிய கவிதை துறையில் சிறப்புப் பெற்றது போலவே இக்காலத்திலும் பல துறைகளிலும் பெண்கள் இன்னும் சிறப்புற்று இருந்திருக்கலாம்..

2..**காரைக்கால் அம்மையாரின பெண்ணிய சிந்தனை**

பெண்களுக்கு சமுதாயத்தின் பன்முனைகளில் இருந்தும் ஏற்படும் பிரச்சனைகளை கண்டறிந்து அவற்றிற்கான காரணங்களை ஆராய்ந்து தீர்வு காண வழிகாட்டுவது பெண்ணியம் சிக்கல்களுக்கான காரணிகளின் அடிப்படையில் பெண்ணியம் பல வகை படுத்தப்படுகின்றது எனினும் ஒவ்வொரு பெண்ணிய வகையும் தனித்து பேச இயலாத அளவிற்கு அமைகின்றது. காரைக்கால் நகரில் தனதத்தனார் என்ற வணிகர்க்கு பிறந்த பேரழகுடைய பெண் குழந்தை புனிதபதி என்பவள் அவள் சிவன் பற்று உடையவள் சிவனடியார்களை கண்டால் அவர்களை வணங்கி உபசரித்து மகிழ்வாள் இவ்வாறு இருக்கின்ற பொழுது பருவ வயதில் அழகு மிற வளர்ந்த அவளுக்கு திருமணம் நடைபெற்றது நாகப்பட்டினத்தில் வாழும் பரமத்தத்தனுக்கு புனிதவதியை மணம்

முடித்து வைத்தனர் இரு குடும்பத்தினருக்கும் திருமணத்தில் உடன்பாடு ஏற்பட்டது. மனம் மகிழ்ச்சியும் **நிறைவேறியது தனது கணவரின் விருப்பத்திற்கு ஏற்ப காரைக்கால் நகரில்** குடிபுகுந்தனர்.. இருவரும் தனியாக குடும்பம் நடத்த தொடங்கினர் பரமதன் சாதாரண உலகியல் வாழ்வு விரும்புகிறானாவாகவே வாழ்ந்தான் ஆனால் புனிதவதி சிவனுடைய பக்தையாக இருந்தால் இவ்வாறு இருக்கையில் பரமத்தத்தனை பார்க்க வாணி நிமித்தமாக வந்த சிலர் இரண்டு மாங்கனிகளை அவனிடம் தருகின்றன அதனை வீட்டில் புனிதவரிடம் கொடுக்குமாறு கூறுகின்றான் புனிதவதியார் கனிகளைவீட்டில்பாதுகாப்பாகவைத்தாள்அந்த நேரம் சிவனடியார் ஒருவர் பசியுடன் வீட்டுக்கு வருகிறார் இவ்வடிகாரின் பசியை தீர்ப்பேன். என நினைத்து வடியாருக்கு கால் கழுவ நீர் கொடுத்து சோறு சமைத்து காய்கறிகள் எதுவும் இல்லாததால் கடவுள் கொடுத்த மாங்கனிகளில் ஒன்றை வைத்து உணவளித்தால் அடியார் உணவருந்தி சென்றுவிட்டார் பரம்பரத்த நாள் தோறும் மதியத்தில் வீட்டுக்கு வந்து உணவு அருந்துவது வழக்கம் அன்று இதே போல் இல்த்தில் உணவு அறிந்து கொண்டிருக்கும் பொழுது மாங்கனியை அறுத்து தருமாறு கேட்டான் புனித வெறியும் கொடுத்தாள் இன்னொரு கனியை கொடு என்று கேட்ட பொழுது புனிதவதி மற்றொரு கனியை தேடுவது போல உள்ளே அறைக்குள் சென்றாள் இல்லாததை எப்படி கூறுவது என்று எண்ணி இறைவனிடம் வேண்டுகின்றாள் அப்பொழுது சிவனும் அவளது வேண்டுதலை கேட்டு ஒரு மாங்கனி கொடுக்கின்றார் அந்த கனியையும் கணவனுக்கு அறுத்து கொடுக்கிறார் பரமகத்தன் இது மிகவும் சுவையாக இருக்கிறது என்று கேட்கிறான் இதனை செவியுற்ற புனித விதி கலக்கமடைகிறாள் இறைவன் அருளால் கிடைத்தது என்று எப்படி கூறுவது என்று சிந்திக்கையில் உண்மையை கூறு விடுகிறாள் இன்னமும் ஒரு கனி வேண்டுமென்று கேட்க இறைவனிடம் சொல்லுகிறாள்.. இறைவன் அருளுகிறார் இதனால் மனம் தடுமாறி புனிதவதி நோக்குகின்றான் அச்சம் ஏற்படுகிறது இவள் வேறொரு

"**அணங்கு**"என கருதி தான் உற்றார் உறவினர் அனைவரிடமும் கூறுகிறான் மேலும் அவளுக்கு எதுவும் தெரியாதவாறு இவளை விட்டு பிரிந்து வாழ்வதுதான் நல்லது என்று எண்ணி பிரிந்து செல்கிறான் ஏன் என்று கேட்கின்ற பொழுது பொருள் சேர்ப்பதற்காக செல்கிறேன் பொருள் சேர்த்து விட்டு தான் திரும்ப வருவேன் என்று சொல்லி பிரிகிறான் போனவன் திரும்ப வரவில்லை போன இடத்தில் வேற ஒரு பெண்ணுடன் வாழ்க்கை நடத்திக் கொண்டிருக்கிறான் இதை அறிந்த புனிதவதி அவனிடம் செல்கிறாள் அப்பொழுது அவனும் அவனுடைய மனைவியும்இ பிள்ளைகளும் புனித விதை காலில் விழுகின்றனர் புனித வெள்ளி பிரமிப்பாகி இனிமேல் இந்த இல்லற வாழ்க்கையில் வாழ்வது நல்லதல்ல என்று எண்ணி சிவனை எண்ணி எண்ணி உருகி நிற்கிறாள் சிவனிடம் சென்று விடலாம் என்று எண்ணுகிறாள் தன்னுடைய உடல் அழகு எல்லாம் கெட்டு அழியுமாறும் பேய் வடிவம் வேண்டும் என்றும் இந்த உலகத்தில் யாரும் என்னை பார்த்து உணர்வாள் எண்ணி விடக்கூடாது என்று பேய் வடிவம் பெறுகிறாள் மீண்டும் சிவனை எண்ணி அவர் இருக்கும் இடமாகிய கைலாய மலைக்கு செல்கிறாள் காலால் நடக்காமல் தலையால் நடந்து செல்கிறார் இதை சிவனும் பார்க்கிறார் அப்பொழுதே. "**பிறவா மைவேண்டும் மீண்டும் பிறப்பு உண்டேல் உன்னை மறவாமை வேண்டும் இன்னும் வேண்டும் நான் மகிழ்ந்து பாடின் அறவா நீ ஆடும் போது உன் அடியின் கீழ் இருக்க வேண்டும் என்றார்**" இவ்வாறு இறைவன் அம்மையாருக்கு அருள் புரிந்து

நீடுவாழ் பழன மூதூர் நிலவிய ஆலங்காட்டில் ஆடு மாநடமும் நீகண்டானந்தஞ் சேர்ந்தெப்போதும் பாடுவாய்நம்மை""அதன் பின்னர் **"கொங்கை திரங்கி**" எனத் தொடங்கும் மூத்த திருப்பதிகத்தை பாடினார் அதன் பின்னர் "**எட்டி இலவம் மீகை என்ற பாடல் அடி எடுத்து கொட்ட முழவம் கூளி பாட குடிகன் ஆடுமே**"என்னும் திருப்பதிகம் பாடினார்

காரைக்கால் அம்மையார் புராணம் புனிதபதியார் இல்லறத்தை திறப்பதுடன் தான் எலும்பு போர்த்திய தோல் தசை அனைத்தையும் இழந்ததை அறிகின்றோம் பொங்கி பேரழகி காரைக்கால் அம்மையார் என குறிப்பிடுகின்றது இதன் மூலம் பருவப் பெண்ணாக இருக்கும் பொழுது அழகு விழும் பெண்ணாக இருந்துள்ளார் என்பதை அறிகின்றோம்.

இப்ராணத்தின் மூலம் ஒவ்வொரு பெண்ணும் நசுக்கப்படுகிற போதும் அவனின் எதிர்பாக அவரின் அழகை குரல் மட்டுமே ஒலித்தது நீண்ட காலமாய் அந்த ஈனக் குரல்கள் வரலாற்றின் சுவர்களில் மோதி மோதி விழுந்தன குடும்பச்சுவர்களின் உயரத்தை தாண்டி மேலே வர முடியாமல் சமையல் அறைகளின் மூளைகளில் படுக்கையறை கட்டிலரை என சுவருகளே சாய் தட்டப்படுகிற போது உள்ளுக்குள் இருந்து ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாய் பெண்களின் அவலக் குரல்கள் அலை அலையாய் கிளம்பி அதிர்வதை கேட்கலாம் காரைக்கால் அம்மையார் முதல் இக்காலம் வரை பெண் அடிமைத்தனம் இருந்ததே புலப்படுத்துகிறது இதற்கு ஏற்ப பண்டிகை இலக்கியங்களும் அதற்கு பிற்பட்ட இலக்கியங்களும் தங்களின் நிலையை பற்றி சிந்திக்க தூண்டாத அதற்கான வாய்ப்பை கூட அளிக்காத இலக்கிய சூழலை சங்க கால முதல் இடைக்காலம் வரை இருந்துள்ளது இவ்விளக்கியங்களில் இதற்கான சான்றுகள் பல இடங்களில் காணலாம் பொருள் தேட சென்ற கணவனின் தற்காலிக பிரிவையும் தாங்க இயலாத தளவியரை சங்க இலக்கியத்திலும் வண்ணச் சீரடியை மன்மகள் அறியாத பெண்ணை காப்பியத்திலும் இறைவனை கணவனாக எண்ணிப் பார்க்கும் பெண்ணை பத்தி இலக்கியத்திலும் தலைவனின் அன்பை பெறுவதற்காக அ்றிணை பொருளை தூதுவிடும் பெண்களை சிற்றிலக்கியங்களிலும் காண்கிறோம் இத்தளவியர் அனைவரும் தங்களுக்கு ஏற்பட்ட அல்லது இழைக்கப்பட்ட சிக்கல்களையும் கொடுமைகளையும் நினைத்து பார்த்து இனம் காண

இயலாத அளவிற்கு போற்றுதலுக்கு ஆளானார்கள். அதனால் அவற்றின் நின்று தங்களை விடுவிக்க முடியாத ஒரு வித மயக்கத்திலேயே இப்பெண்கள் வாழ்ந்துள்ளனர் என்பது அக்கால சமுதாய சூழல் இதற்கு உறுதுணையாக இருந்துள்ளது காரைக்கால் அம்மையார் இவர்களைப் போன்றவர் தான் இல்லறத்தில் ஈடுபாடு இருந்தும் கணவனை நாட்டம் கொள்ளச் செய்யும் எழில் மேடையை பெற்றிருந்தும் இல்லறத்தில் தொடர்ந்து ஈடுபடாத நிலையை புனிதவனுக்கு ஏற்படுகிறது இதற்கு காரணம் ஆழ்ந்த இரங்கப்பட்டு தான் மேலும் இறைவனிடமிருந்து மாங்கனிகளை பெற்ற விதத்தில் கணவனுக்கு இவர் மீது சந்தேகம் ஏற்படுகின்றது இதனை புனித விதியால் நடத்திக் கொண்ட சந்தேகமாகவே நாம் கருதலாம் இத்தகைய பெண்ணுடன் வாழ அவனுக்கு மனம் இல்லை இதனை வெளிப்படையாக சொல்வதற்கு அஞ்சு இறை ஆற்றல் அதிகம் பெற்ற பெண்ணாக அவரை சித்தரித்து பிரிந்து செல்ல முயல்கிறான் இவரை விடுத்து மற்றொரு பெண்ணையும் மறைக்கிறான் உயிர் வளர்ச்சியின் அடிப்படை தேவையான ஆண் பெண் இணைப்பு ஆணாகவும் பெண்ணாகவும் பிரிந்து இயங்கும் சமூக சூழலில் சமூக வரலாறும் பண்பாடும் கால சூழலுக்கு ஏற்ப சமூகத்தில் பல்வேறு தளங்களுக்கு ஏற்ப ஆணுக்கும் பெண்ணுக்கும் தகுதி வேறுபாட்டை நிர்ணயித்து விடும் காரைக்கால் அம்மையார் வாழ்ந்த சமுதாய கட்டமைப்பை அவரை எலும்பு கூடாக்கி கைலாயம் மலைக்கு தலைகீழாக நடந்து செல்ல வைத்தது அங்கிருந்து வந்த திரு ஆலங்காடு என்னும் சுடுகாட்டில் நடனமிடும் சிவனின் பாதங்களில் அமரச் செய்தது இது புனிதமாக போற்றப்பட வேண்டிய நிகழ்ச்சி அல்ல புனித விதி என்ற சாதாரண பெண்ணிற்கு கணவனும் சமுதாயம் கொடுத்த தண்டனை என்றே நாம் கருதலாம் இதனை மறைப்பதற்காகத்தான் அம்மையே என சிவனே அழைத்தார் என கூறப்படுகின்றது இறைவனை தஞ்சம் அடைந்த இடமும் சுடுகாடு இவர் மீது சந்தேகம் கொண்டவர்கள் இவரை ஊரைவிட்டே ஒதுக்கி வைக்க எண்ணிற்க்கப்படும் இதனையே..

அப்படியே நிறைவேற்ற இயலாமல் சுடுகாட்டில் இருக்கும் சிவனை தஞ்சம் உடைய செய்கின்றனர் கணவனாகிய பரமதத்தன் தன்னுடைய குற்றத்தை மறைப்பதற்காக புனிதவதியின் காலில் விழுந்து வணங்கி உன்னுடைய அருளால் தான் நாங்கள் வாழ்கின்றோம் எனக் கூறுகின்றான் இப்பொ பொய்யான மொழிகள் புனித விதியின் சிந்தனையை மாற்றுகின்றன கணவனின் குற்றத்தை மறந்து தன்னைத்தானே மேன்மையாக கருதும் மனப்போக்கு ஏற்படுகின்றது இத்தகைய மனநிலையை சமுதாயம் உருவாக்குகிறது என்று கூறலாம் அதிகார வர்க்கம் என்னும் சமுதாயம் தன்னுடைய பணியை இங்கு சரியாக செய்து வருகின்றது அதிகாரம் எப்பொழுதுமே தன் அதிகாரம் செலுத்துகின்ற பொருளின் மொழியை பிடுங்கிக் கொள்கிறது அல்லது அடக்கி வைக்கிறது என்னும் கூற்று இங்கு சரியாகவே பயன்படுகிறது பரமதத்தன் தன் பலவீனத்தை மறைக்கவே தாம் மட்டும் புனிதவதின் காலின் விழாமல் தான் இரண்டாம் மனைவி குழந்தை ஆகி ஒரு இருவரையும் சேர்த்து வில செய்கிறான் புனிதபதி இவ்வாறு நடக்கும் என சற்றும் எதிர்பார்க்கவில்லை. இதனால் அதிர்ச்சி அடைந்தார் இதற்குப் பின் இவருடன் சேர்ந்து வாழும் வாய்ப்பு தரமாட்டான் என்பதை உணர்ந்து அடுத்து தான் எடுக்க வேண்டிய முடிவை பற்றி சிந்திக்கின்றார் அப்பொழுது தனக்கு உண்டான ஒருமை நடத்தினால் ஒவ்வொரு வாகனத்தை துதித்து அதாவது உம்முடைய அழகான திருவடிகளை போற்றும் நல்ல சிவ பூதக்கணங்களில் நானும் ஒன்றானேன் என்று உன் உருகி நினைத்து அற்புதத் திருவந்தாதி திருவிரட்டை மணிமாலையையும் படுகிறார்.. புனிதவதே தன்னை பூதம் என குறிப்பிட்டிருப்பது சமுதாயத்திற்கு பணிந்து போகும் அவருடைய பண்பை காட்டுகிறது அழகு விழுது உடல் வாகுடன் இருந்தால் இச்சமுதாயம் மேலும் தன்னை பழிக்கு ஆளாக்கும் என்று எண்ணி உன் உடம்பை தவிர்த்து அதன் பெண் சதை வனப்பையெல்லாம் உதறி எரிந்துவிட்டு வெறும் எலும்பு கூடாக நிற்கின்றாள் கைலாயத்தை நோக்கி புறப்பட்ட இவர் வடை திசையில்

உள்ள தேசங்களை எல்லாம் வணங்குகின்றார்..

“

**கொங்கை திரங்கி நரம்பு எழுந்து குண்டு**
**கண் வெற்ப குழி வயிற்றுப் புங்கி**
**சிவந்திரு பற்கள் நீண்டு பரடுயர்**
**நீள்கனைக் காலோர் பெண்பேய்**
**தங்கி அலறி உலறு காட்டில்”**

நிலைநாட்ட பாடுபட்டிருக்கும் பெண்களின் பட்டியலாக புனிதவதியின் மேல் இச்சமுதாயம் செலுத்த விரும்பிய ஆதிக்கம் இப்பாடல் முழுவதும் பிரதிபலிக்கின்றது அதனால் தான் புனித விதியின் அழகான உடல் கோரமாக்கப்பட்டுள்ளது வெறுக்கத்தக்கதாக அச்சத்தை தரக்கூடியதாக மாற்றப்படுகின்றது நிகழ்ச்சிகள் யாவும் சர்ச்சை மையமாட்டேன் நிகழ்கின்றன பண்டைய புராண இலக்கியங்களிலும் காப்பியங்களில் வித்தது போக்க மிகுதியாக காணலாம் கம்பராமாயணம் காட்டும் பெண்களும் கற்பி இலக்கணத்தை வலியுறுத்த வந்த பெண்களை பக்தி இலக்கியக் காலத்தில் பெண்ணை கடவுளுக்கு அளிக்கும் பக்தி மயக்கங்கள் ஆகியவை யாவும் ஆண் வர்க்கத்திடம் தங்களது கர்ப்பிணித்தன்மையை இதே நிலைதான் புனிதபதியின் வாழ்விலும் நிகழ்ந்துள்ளது இவர் தனது கற்பை நிலை நாட்ட தன் உருவத்தையே பலி கொடுக்கின்றார் இத்துடன் அவரை சமுதாயத்திற்கு ஒரு தீர்ப்பை நிறுத்திக் கொள்ளவில்லை கைலாயம் சென்ற அவரை சிவன் அம்மையே என அழைத்ததாகவும் இவர் சிவனை அப்பா என்று அழைத்ததாகவும் கூறி தன் தூய்மையை தன்மையை நிரூபிக்கின்றார். மனிதர்களிடையே ஏற்பட்ட சந்தேகம் மனிதன் இறைவன் உறவுக்கு மத்தியில் ஏற்பட்ட விட கூடாது என்பதில் சேக்கிழார் மிக கவனமாக செயல்படுகிறார் அதனால் தான் அம்மையப்பர் என்ற தாய் தந்த பிள்ளை உறவு இவரால் இங்கு

நிலைநாட்டப்பட்டுள்ளது இவை யாவும் புனிதவதியின் புண்பட்ட உள்ளத்திற்கு சற்று ஆறுதல் கூறும் போக்கா சிவனின் அருளை முழுமையாக அடைவதற்காக பேய் உருவடிக்கிறார் என்பதில் உள்ள ஆழ்ந்த உண்மையை நாம் உய்த்து உணர வேண்டும் அதாவது அழகு உடலை அவரே மனம் உவந்து வெறுக்கவில்லை குடும்பம் சமுதாயம் ஆய்வுவற்றின் அச்சுறுத்தலுக்கும் பழிச்சொற்களுக்கும் அஞ்ஞியே முடிவை எடுத்துள்ளார்.. இந்நிலையை அடைந்த பின்னர் காரைக்கால் அம்மையார் என்ற சிறப்பு பெயருக்கு கூறியவராய் இருந்தார் என்று உருவம் அடையவில்லை எனில் மற்றும் ஒரு சீதையாக தான் இவர் நம்மிடையே உலவிருப்பார்..

**வெள்ளிவீதியாரின் பெண்ணிய சிந்தனைகள்.”**

**அம்ம வாழி தோழி நம் ஊர்ப் புரிந்தோர்**
**புர்ப்போர்இருந்தனர்கொல்லோ?** .
தண்டுடைக்கையர் வெண்தலைச்சிதவலர் நன்று நன்று என்னும்
மாக்களோடு இன்று பெரிது என்னும் ஆங்கணது அவையே

**“இடிக்கும் கேளீர் நுங் குறையாக**
**நிறுக்கல்ஆற்றினோ நன்று மன்தில்ல**
**ஞாயிறு காயும் வெவ்வறைமருங்கில்**
**கையில் ஊமன் கண்ணில் காக்கும்.**
**வெண்ணெய் உணங்கல்போலப்**
**பரந்தன்று இந்நோய் நோன்று கொளற்கு அரிதே””.**
**கன்றும் உண்ணாது கலத்தினும் படாது**
**நல்ஆன்தீம் பால் நிலத்துக்தகு உங்கு**
**எனக்கும ஆகாது என்னைக்கும் உதவாது**
**பசலை உணீயர் வேண்டும்**
**திலை அல்குல் என் மாமைக் கவினே”””**

தலைவி நல்ல பசுவை தோழிக்கு காட்டினாள் அந்த பசுவை பார் கொழு கொழு என்று வளர்ந்த பசு நன்றாக புல் மேய்ந்து பசியாறி வயிறு நிரம்பி வருகிறது தன் கன்றை தேடி கன்றை காணும் கண்டேன் நினைக்கிறது பசு நினைத்த உடனே அதன் மடிக்காமல் இருந்து பால் சொரிகிறது அவ்விதம் சொரிந்த பால் கீழே ஓடுகிறது கால் எடுத்து ஓடுகிறது அதை காட்டுகிறார் அய்யய்யோ கன்றும் குடிக்கவில்லை களத்திலும் கொள்ளவில்லையே பால் வீணாகி கீழே விழுகிறது என்று தோழி வருந்துகிறாள் கன்றும் கிடைக்கவில்லை கலத்திலும் படவில்லை என்று முணுமுணுத்தது அவளது வாய்.. மலாய் போகிறதே பாலாய் போகிறதே என்றால் தோழி அதுபோல என்னுடைய அழகானது எனக்கும் பயன்படவில்லை என்னை விரும்பியவனுக்கும் பயன்படாமல் வீணாய் கெட்டு அழிந்து போகும் நிலைமையை அவள் அழகை காம உணர்வுகளை யாருக்கும் பயன்படாமல் தனக்குள்ளேயும் அடக்கி வைத்து தனக்கும் பயன்படாமல் தன் உடம்பு அழிகின்ற நிலையையும் அவரது மேனி அழகையும் இங்கே தோழி இடம் தலைவி விவரிக்கின்றார். பெண்களுடைய முதிர்ச்சியையும் முதிர்ந்த கன்னியின் வாழ்க்கையையும் வெள்ளிவீதியார் அழகாக எடுத்துரைக்கிறார் மேலும் ஒரு பாடலில் யாரடி அவர்கள் கையிலே தடியும் தலையிலே உண்டாக்கும் நரைத்தலையுமாக வருகிறார்கள் அவர்கள் யார் ஓ அவர்களா உனக்கு தெரியாதா பெண் பேச வந்திருக்கிறார்கள் உன் காதலன் ஊரில் உள்ள பெரியவர்கள் அப்படியா எனக்கு பயமா இருக்கு என்னடி பயம் அவர்கள் புலியா அல்லது கரடியா இல்லை நமது பெற்றோர்கள் சரி என்று சொல்ல வேண்டுமே சொல்லவில்லை என்றால் என்ன செய்வது அதற்காகத்தான் நான் பயப்படுகிறேன் பயப்படாமல் எப்படி இருக்க முடியும் நீயே சொல் என்று தோலியிடம் கூறிக்கொண்டு இருக்கிறாள் ஒருவேளை நாம் காதலித்த காதலனோடு நம்முடைய வாழ்க்கை சேரவில்லை என்றால் நம்முடைய நிலைமை

என்ன ஆகும்? வேறு ஒருவனுடன் வாழ முடியாதே வாழ்க்கை நாசம் ஆகுமே அது குத்தி காட்டுவானே நான் என்ன செய்வேன் என்னை விட்டு விட்டால் என் பெற்றோர்கள் வேண்டாம் என்றால் என்று தலைவி தோழியிடம் புலம்பி கொண்டிருக்கிறாள் பெண்ணினுடைய உணர்வுகளை இந்தப் பாடல்களிலும் புலப்படுத்துகிறார் மேலும் ஒரு பாடலில் தனது காதல் அழகு மேனி எல்லாம் யாராவது ஒருவனுக்கு பயன்பட வேண்டும் அப்படி பயன்படாவிட்டால் என்னிடம் மட்டும் இருந்தால் என்ன பயன் இதை யாரிடம் சொல்லவும் முடியாது வேண்டுமென்று கேட்கவும் முடியாது உலகம் என்ன சொல்லும் என் மேல் பழி போடுமே என்னை தவறாக நினைக்குமே என்ற எண்ணி தன் கருத்தை நேரடியாக கூறாமல் வாய் பேசாத குருடன் கை இல்லாத முடவன் அவனிடம் ஒரு பெண் பாறையில் வெண்ணையை பாதுகாக்குமாறு வைத்துவிட்டு செல்கிறாள் அது வெயில் அடித்தவுடன் வெண்ணெய் உருகி வீணாகி கீழே விழுகிறது. அதை அவனால் அள்ளவும் முடியவில்லை. பிறரிடம் சொல்லவும் முடியவில்லை என்று தவிக்கின்ற அந்த வெண்ணையை காய்கின்ற காவலாளி எப்படி தவிக்கிறானோ அதேபோல நானும் என்னால் சொல்லவும் முடியாமல் அடக்கவும் முடியாமல் தவிக்கிறேன் என்று பெண்ணினுடைய உணர்ச்சிகளையும் அதனுடைய தவிப்பையும் விரத்தியையும் எடுத்துக்காட்டுவதாக வெள்ளிவீதியார் இப்பாடல் மூலம் பெண்ணிய சிந்தனைகளையும் அவளுடைய உணர்வுகளையும் எடுத்துரைக்கிறார்..

**பொன்முடியார் பெண்ணியச் சிந்தனைகள்:**

**ஈன்று புறந்தருதல் என்தலைக்கடனே !!**
**சான்றோன் ஆக்குதல் தந்தைக்குக் கடனே !**
**வேல் வடித்துக் கொடுத்தல் கொல்லர்க்குக் கடனே!**
**நன்னடை நல்கல் வேந்தற்குக் கடனே !**
**ஒளிறுவாள் அருஞ்சமம் முருக்கிக்களிறு எறிந்து பெயர்தல்**
**காளைக்கு கடனே!!**

பாடியவர் பொன்முடியார் திணை: வாகை துறை: மூதின் முல்லை கடமை உணர்வோடு வாழ்ந்தவர்கள் பழந்தமிழ் மக்கள் அவர்கள் ஒவ்வொருவரும் ஆற்ற வேண்டிய கடமைகளையும் செயல்களையும் பற்றி பொன்முடியார் விவரமாக இப்பாடலில் விளக்கி உள்ளார் தாயின் கடமை பிள்ளையை பெற்றெடுத்தலாகும். தந்தையினுடைய கடமை அவனை சமுதாயத்தில் மேலோனாக! சான்றோனாக! உயர்ந்தவனாக! பண்புள்ளவனாக! எல்லாராலும் பாராட்டும்படியாக! பலவிதமான நல் ஒழுக்கத்துடன் சமுதாயத்தின் பண்புடன் பிள்ளைகளை வளர்க்க வேண்டும் . மேலும் வேலை வடித்துக் கொடுப்பவன் கொல்லன் பட்டறையில் அவன் போருக்கு பயன்படக்கூடிய நல்ல பாதுகாக்க கூடிய வெற்றியை தரக்கூடிய வீரத்தை புகழக்கூடிய வகையில் நல்ல கூர்மையான வேலை கையில் வடிவமைத்து தருபவன்.இது கொல்லனுக்கு உரியகடமை என்று கூறி மேலும் அந்த வேலை கொண்டு போரிலேயே அஞ்சாது நின்று வென்று பகை மன்னர்களிற்றையும் கொன்று மீண்டு வருதல் வளர்ந்த காளையான வீரனுக்கு அழகு என்று ஒவ்வொரு மனிதர்களுக்கும் தேவையான கடமைகளை பட்டியலிட்டு அறிவுறுத்துகிறார் பொன்முடியார்.

**“பால்கொண்டு மடுப்பவும் உண்ணாண் ஆகலின்**
**செறா அது ஓச்சிய சிறு கோல்அஞ்சி**
**உயவொடு வருந்தும்மன்னே! இனிய**
**புகர் நிறங்கொண்ட களிறடு ஆனான்**
**முன்னாள் வீழ்ந்த உரவோர் மகனே!**
**உன்னிலன் என்னும் புண் ஒன்று அம்பு**
**மான் உனைஅன்ன குடுமித்**

**தோல் மிசைச் கிடந்த புல் அணலோனே!!**

குழந்தைப் பருவத்தில் சிறுகோலுக்கு அஞ்சு ஓடியவன் இளமைப் பருவத்தில் போர்க்களத்திலே மரப்போராற்றே புண்பட்டு விழுந்து புகழ் பெற்ற நிலையை வியந்து போற்றுகின்ற பாராட்டுகின்ற பண்பையும் பகைவர் படை நடுங்கும்படி தன் மார்பில் தைத்த வேலை பறித்து எரியும் ஒரு வீரனின் வீரத்தை புகழ்ந்து பாடும் பாட்டு. இது முன்னாள் பெரும் போரிட்ட ஆண்மக்கள் போர்க்களத்திலே விழுந்துபட்ட வலியோனாகிய என் காதல் கொழுநன் மகன் இவன் குழந்தை பருவத்திலே பாலுண்ணாது முரண்பட்ட சிந்தனை உள்ளவனாக இருந்தவன். இப்பொழுது வாலிப வயதில் நல்ல இளம் வயதில் போர்க்களத்தில் புறம் முதுகிட்டு ஓடாதபடி போர்க்களத்தில் எதிரிகளுடன் போராடி விழுமப்புண் பட்ட வீரனை புகழ்ந்து பாடுகிறார் . அன்றைய காலகட்டத்தில் ஆண் மக்களுக்கு இடையே ஒரு போராளியாக தன்னம்பிக்கை வாதியாக ஆண் இனத்திற்கு சகமாக ஒரு பெண் புலவர் பாடியிருப்பது மிகவும் பெண் இனத்திற்கு போற்றக் கூடியதாக இருக்கின்றது இவருடைய ஆளுமை இவருடைய தன்னம்பிக்கை இன்றைய இளம் பெண்களுக்கு உதாரணமாகவும் வழிகாட்டியாகவும் பயனுள்ளதாகவும் இருக்கின்றது என்பது புலன் ஆகின்றது..

**Additional Resources:**

Smart board

WebSide

www.sangathamizh.com

**Practice Questions:**

1.பெண்ணிய வகைகள் குறித்து எழுதுக

2. ஆண்டாள் பிரியதர்ஷினி குறித்து விவரி

3. அ. வெண்ணிலா வாழ்க்கைக் குறித்து எழுதுக

4. அ. வெண்ணிலா கவிதைத் தொகுப்புகள் பற்றி கட்டுரை வரைக

5. இக்காலபெண் எழுத்தாளர்களை பற்றி கட்டுரை வரைக

**References:**

1.இர. பிரேமா பெண்ணிய சிந்தனைகள்

2. அரங்க மல்லிகா. பெண்ணியக் கோட்பாடுகள்

3. நவீன பெண் கவிஞர்கள் கவிதைகளில் தொகுப்பு (கௌரா வெளியீடு)